**செய்தி வெளியீடு எண்: 47/2024** **நாள்: 27.06.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2 வழித்தடம் 4-ல் பூந்தமல்லி புறவழிச்சாலை மற்றும் போரூர் இடையேயான உயர்மட்ட வழித்தடத்தில் கட்டுமானத்திற்கான தேவையான அனைத்து முன்னமைக்கப்பட்ட (all precast elements) வார்ப்புப் பணிகளை இன்று (ஜூன் 27, 2024) வெற்றிகரமாக முடிக்கப்பட்டது. இதன் மூலம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஒரு குறிப்பிட்த்தக்க சாதனை படைத்துள்ளது. இந்த பணியில் 2885 முன் வார்ப்பு கூறுகள் அடங்கிய U-Girders, pier arms, portal beams மற்றும் 18 வகையான pier caps ஆகியவை அடங்கும், இவை கோலப்பஞ்சேரியில் உள்ள HEC-KEC கூட்டமைப்பு நிறுவனத்தில் வார்க்கப்பட்டவை.

இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், KEC நிறுவனத்தின் திட்ட இயக்குநர் சுந்தரமூர்த்தி, துணைத் தலைவர் கந்தசாமி, பொது ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், முழு பணியும் பாதுகாப்பாக முடிக்கப்பட்டது. பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**